# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 56/2023

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05-ம் நாள் செவ்வாய்கிழமை வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW6 Examined as PW8

| | | |
|---|---|---|
| Date | : | 05.03.2024 |
| Name | : | ரவி |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1,A4,A5,A6,A7 Presnet. A3 absent. 317 petition filed and allowed.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் நல்லாந்தூர் பாவேந்தர்சாவடியில் வசிக்கிறேன்., தனியார்நிறுவனத்தில் பணிபுரிகிறேன். அ.சா.1,2 யை தெரியும். ஆஜர்எதிரிகைள தெரியும். 17.02.2018 தேதி ஜான்பீட்டர் எனக்கு போன்செய்தார். அண்ணனை அடித்துவிட்டதாகவும் என்னை வருமாறு கூறினார். அதன்பிறகு வயலுக்கு சென்றேன் வயலில் யாரும் இல்லை. நான், யுவான், பெத்தபெருமாளும் கொள்ளிமேடு கால்வாய்கொட்டைகைக்கு சென்றோம். கண்ணன் மற்றும் 4 பேரும் சேர்ந்து ஜான்சன் அண்ணை அடித்துக்கொண்டிருந்தார்கள். கட்டையாலும், பெல்டாலும் தண்ணீரை எடுத்து முகத்தில் ஊற்றி கால்வாயில்போட்டு எரிங்கடா என்று கண்ணன் சொன்னார். பெத்தபெருமாள் ஏன்போட்டு அடிக்கிறீர்கள் என்று கேட்டு ஜான்சனை அழைத்துக்கொண்டு பெரம்பூர் காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்றார் நான் பின்னால் அமர்ந்துகொண்டு ஜான்சனை பிடித்துக்கொண்டேன், அதன் பிறகு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**